# 56. கோட்புலி நாயனார்

வேளார் - சோழநாடு - திருநாட்டியத்தானகுடி - ஆடி - கேட்டை

இவர் சிறந்த சேனாபதி அரசன் கொடுக்கும் பணத்தில் பெருமு பகுதியை ஈசன் கோயில் நிவேதனத்திற்காகும் செந்நெல்லை வாங்கிக் குவிப்பான். ஓர் சமயம் சண்டைக்காக வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது. தான் சேமித்து வைத்த நெல்லை, ஈசன் ஆணையாக எவரும் உபயோகிக்காமல் பாதுகாக்கும்படி சொல்லிச் சென்றான். இவன் போன பிறகு நாட்டில் கொடிய பஞ்ச மேற்பட்டது. உறவினர்கள் கொடுத்த வாக்கை மீறி, நெல்லைப் பயன்படுத்தி விட்டனர். போர் முடிந்து திரும்பிய கோட்புலி, இதனையறிந்து யாரையும் எதுவும் சொல்லாமல், எல்லோரையும் வரவழைத்து ஒருவர் விடாமல் எல்லோரையும் கொன்று குவித்தான். ஒரு பாவமும் அறியாத சிறுகுழந்தையைக் கொல்லும் பொழது, தடுத்தவனிடம் பாவஞ் செய்தோரின் முலைப்பாலை உறிஞ்சிய குழந்தையும் பாவஞ்செய்ததேயெனக் கூறி அதனையும் வெட்டினான். அவனுடை தீரச் செயலைக்கண்ட சிவபெருமான் உன்னுடைய வாளால் வெட்டப் பட்டவர்களனைவரும், பொன்னுலகையடைந்து பின் என்னுலகையடைவர் நீ மட்டும் இந்த நிலையிலேயே எம்மிடம் வருவாயாக என்று கோட்புலியாரை அழைத்துச் சென்றார்.

ராகம் : ரேவகுப்தி (15) ஆ : ஸரிகபதஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்தபகரிஸ

**பல்லவி**

திருநாட்டியத்தான் குடி வேளாளர் குலத்துதித்த
கோட்புலியார் சேனைத் தலைவராய் விளங்கினார்

**அனுபல்லவி**

திருவமுத படைக்கும் தொண்டினைச் செய்ய
நெற்குவியல் தன்னை மலையாய்க் குவிப்பார்

**சரணம்**

பஞ்சத்தின் கொடுமையால் சிவ ஆணை மீறி
சுற்றத்தார் நெல்லை எடுத்ததைக் கண்டு
வஞ்சனையாக வரவழைத்தனைவரையும்
நெஞ்சினில் குத்திய பின் உன்னடி சேர்ந்தார்

**பல்லவி**

| | | |
|---|---|---|
| , கபகரிக பாபா , த பா | ; , பத பா ப | பபா ப பாதப |
| திரு நாட்டி யத் தான்குடி | வே . ளா ளர் | குலத்து தித்த |
| கா , க பகரீ ஸா பா தாஸா | ; , ஸ ரி க கா | பா பா பா பா |
| கோட் புலி யார் சே . னைத் | த லை வ ராய் | விளங் கி னார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பக பதா ஸ்ா , தஸ்ா ஸ்ா | ; பதஸ் ஸ்ா , | தஸ் தா தா பா |
| திரு வமு து படைக்கும் | தொண் டி னை | செ . . . ய |
| ; , பா க ரி க பா ; தா பா | ; , க ப த பா | பக தப கரிஸா |
| நெற் கு . வி யல் தன்னை | மலையாய்க் | கு . வி . . ப் பான் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , கப கரிஸ ஸா ஸா ரீஸா | ; , ரிஸ பா த | ஸா ; ; ஸா |
| பஞ் சத்தின் கொடுமை யால் | சி வ ஆ ணை | மீ றி |
| ; , க ப கரிக பா ; பா பா | ; , ப ப த பா | பா ; தபகா |
| சு ற் றத்தார் நெல் . லை | எடுத் த தைக் | கண் டு . . |
| ; , ப க ப தா ஸ்ா ; ; ஸ்ா | ; , ஸ் க் ரி. ஸ்ா | த தாஸ் தா பா |
| வ ஞ் ச னை யா . . க | வ ர வழைத் | த னை வ ரையும் |
| ; , க ப கரிக பா ,ப தா பா | ; , ப க த பா | பகதப கரி ஸா |
| நெஞ் சி . னில் குத்தி ய பன் | உன்னடி | சே . . . . ர்ந் தார் |